**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**அவசரக் கூட்டப்பொருள்**

2010ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7ஆம் தேதி வியாழக்கிழமை காலை10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| | **வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>**1)** தமிழக அரசு அறிவித்துள்ள ‘சிறப்பு சாலை 2010–11’ திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாநகரில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிக்கு ரூ 20.00 கோடி மானியமாக வழங்கி ஆணை பிறப்பித்துள்ள மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இம்மாமன்றம் தனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது. | 203) ஏக மனதாகத் தீர்மானிக்கப் பட்டது |

2) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் தற்போது பாதாளச் சாக்கடைத்திட்ட பணியில் குழாய்கள் அமைக்கும் பணியின் போது தோண்டப்பட்ட சாலைகளையும், மற்றும் மழையினால் பழுதடைந்த நிலையில் உள்ள சாலைகளையும் சீர் செய்வதற்கு மாமன்றம் தனது தீர்மான எண். 192 நாள் 30–8–2010ன்படி ரூ 3,271.90 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு மானியம் கேட்டு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

204) பதிவு செய்யப்பட்டது

அதன் அடிப்படையில் அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணை பரிசீலனைசெய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண். 25910/2010/இ3 நாள் 18–9–2010 தேதிய கடிதத்தில் ரூ 2033.65 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சாலையின் பெயர் | வார்டு எண் | சாலையின் இனம்(தார் சாலை /சிமெண்ட் சாலை) | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மொத்தமதிப்பீடு தொகை (சிறுபாலம், மழைநீர் வடிகால் , குறுக்கு வடிகால்,மற்றும் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4 வது ரயில்வே கேட் முதல் எட்டையபுரம் ரோடு சந்திப்பு வரை உள்ள குறிஞ்சி நகர் மெயின் சாலையில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 1 | சிமெண்ட் சாலை | 0.598 | 7.50 | 64.00 |
| 2 | ஆண்டாள் தெரு ( 2ஆம் கேட் முதல் 3 ஆம் கேட் வரை) சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 1, 2, 28 | சிமெண்ட் சாலை | 0.965 | 7.50 | 113.60 |
| 3 | கீழ சண்முகபுரம் 2 வது தெரு வடக்கு ,சிமெண்ட் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 21 | சிமெண்ட் சாலை | 0.219 | 2.60 | 4.60 |
| 4 | கீழசண்முகபுரம் பத்திரகாளிஅம்மன்கோவில் சுற்றி ,சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 21 | சிமெண்ட் சாலை | 0.226 | 2.75 | 3.90 |
| 5 | சந்திவிநாயகர் கோவில் தெரு, மற்றும் சந்து சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 26 | சிமெண்ட் சாலை | 0.245 | 2.75 | 4.40 |
| 6 | முத்து தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 26 | சிமெண்ட் சாலை | 0.235 | 3.25 | 7.35 |
| 7 | கருப்பசாமி கோவில் தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (எஸ்.எஸ்.பிள்ளை மார்க்கெட் அருகில்) | 25 , 26 | சிமெண்ட் சாலை | 0.87 | 4.00 | 2.30 |
| 8 | நம்பிக்கை ரோச் விளை தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 25 | சிமெண்ட் சாலை | 0.116 | 2.40 | 1.55 |
| 9 | பிரமுத்து விளை மற்றும் பத்திரகாளிஅம்மன் கோவில் தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 17 | சிமெண்ட் சாலை | 0.31 | 2.80 | 6.10 |
| 10 | பார்த்தசாரதி குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 18 | சிமெண்ட் சாலை | 0.14 | 3.75 | 3.85 |
| 11 | மீ.கா. தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 22 | சிமெண்ட் சாலை | 0.12 | 3.45 | 2.60 |
| 12 | டி.ஆர். தெரு (பங்களா தெரு) சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 23 | சிமெண்ட் சாலை | 0.332 | 3.00 | 6.70 |
| 13 | கிருஷ்ணராஜபுரம் 9 வது தெரு மற்றும் மாணிக்கபுரம் மெயின் ரோடு பிரதான சாலை வரை தார் சாலை அமைக்கும் பணி (சாமுவேல்புரம் பள்ளி வரை) | 7, 11 | தார் சாலை | 1.031 | 7.50 | 66.00 |
| 14 | இஞ்ஞாசியார்புரம் ரோடு (அமெரிக்கன் | 4 | தார்சாலை | 0.284 | 7.50 | 18.70 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 14 | இஞ்ஞாசியார்புரம் ரோடு (அமெரிக்கன் ஆஸ்பத்திரி ரவுன்டானா சந்திப்பில் இருந்து செயின்ட் தாமஸ் உயர் நிலை பள்ளி வரை) தார் சாலை அமைக்கும் பணி | 4 | தார் சாலை | 0.284 | 7.50 | 18.70 | |
| | 15 | சேதுபாதை மெயின் சாலையில் தார் சாலை அமைக்கும் பணி (சுந்தரவேல்புரம் மெயின் ரோடு மேற்கு) | 5,6 | தார் சாலை | 0.665 | 7.50 | 42.50 | |
| | 16 | கணேஷ் நகர் மெயின் சாலை (தார் சாலை அமைக்கும் பணி) | 50 | தார் சாலை | 0.918 | 5.50 | 22.25 | |
| | 17 | சந்தை ரோடு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 21 | தார் சாலை | 0.545 | 5.5 | 18.50 | |
| | 18 | பிரையண்ட் நகர் மேற்கு மற்றும் கிழக்கு மெயின் சாலை, பிரையண்ட் நகர் 12 வது தெரு, மற்றும் பிரையண்ட் நகர் 1 வது தெரு முதல் காமராஜ் சாலை வரை தார் சாலை அமைக்கும் பணி | 47, 48 49, 50 | தார் சாலை | 3.339 | 7.50 | 200.00 | |
| | 19 | கிருஷ்ணராஜபுரம் மெயின் சாலையில் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 6, 7 | தார் சாலை | 0.929 | 7.50 | 72.50 | |
| | 20 | சிவந்தா குளம் மெயின் சாலை (வடக்கில் இருந்து தெற்கு) ஹோலி கிராஸ் கான்வென்ட் பள்ளி மேல்பக்கம் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 32, 33 | தார் சாலை | 0.542 | 5.50 | 40.00 | |
| | 21 | தாமோதர நகர் மெயின் ரோடு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 32, 333 6 | தார் சாலை | 0.88 | 5.50 | 48.00 | |
| | 22 | கந்தசாமிபுரம் 60’ மெயின் சாலை (அமெரிக்கன் ஆஸ்பத்திரி ரவுன்டானா சந்திப்பில் இருந்து எஸ்.கே.எஸ்.ஆர். காலனி வரை) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 4 | தார் சாலை | 0.649 | 7.50 | 42.50 | |
| | 23 | செல்வநாயகபுரம் 60’ மெயின் சாலை ( கருத்தபாலம் முதல் எஸ்.கே.எஸ்.ஆர். காலனி வரை ) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி | 2 | தார் சாலை | 0.498 | 7.50 | 43.75 | |
| | 24 | போல்பேட்டை 60 அடி ரோடு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் பணி (எட்டையாபுரம் ரோடு முதல் செல்வநாயகபுரம் வரை) | 1, 2 | தார் சாலை | 0.666 | 7.50 | 62.75 | |
| | 25 | ஸ்டேட் பாங்க் காலனி சக்தி விநாயக புரம் குறுக்கு தெரு தார் சாலை அமைக்கும் பணி (எஸ்.கே.ஆர். காலனி) | 4, 5 | தார் சாலை | 1.388 | 4.75 | 37.00 | |
| | 26 | திரேஸ்புரம் மெயின் ரோடு, பூபாலராயர்புரம் மெயின் ரோடு சந்திப்பு வரை தார் சாலை அமைக்கும் பணி | 12 | தார் சாலை | 0.506 | 7.50 | 32.75 | |
| | 27 | பூபாலராயர் புரம் மெயின் ரோடு (சத்யா மஹால் முதல் முருகன் தியேட்டர் வரை) தார் சாலை அமைக்கும் பணி | 11 | தார் சாலை | 0.458 | 7.50 | 31.00 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 28 | திரேஸ்புரம் மெயின் ரோடு,(ஜோசப் பள்ளி முதல் மேட்டுபட்டி கிழக்கு பகுதி வரை) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 13 | தார்சாலை | 1.431 | 5.50 | | 40.00 | |
| | | 29 | வடக்கு ராஜா தெருவில் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 17 | தார்சாலை | 0.436 | 5.50 | | 21.50 | |
| | | 30 | டேவிஸ்புரம் கிழக்கு மெயின் ரோடு முதல் கருப்பட்டி சொசைட்டி சந்திப்பு வரை தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 10, 17 | தார்சாலை | 0.845 | 5.5 | | 29.60 | |
| | | 31 | வி.இ.ரோடு மற்றும் தேவர்புரம் ரோடு வரை(காய்கறி மார்கெட் சந்திப்பு ) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 22,32 ,37 | தார்சாலை | 1.624 | 9.25 | | 110.00 | |
| | | 32 | போல்டன்புரம் மெயின் ரோடு முதல் நியூகாலனி மெயின் ரோடு வரை (கே.எஸ்.பி.எஸ் தியேட்டர் சாலை) தார் சாலை அமைக்கும் பணி | 45 | தார்சாலை | 0.448 | 7.50 | | 49.00 | |
| | | 33 | போல்டன்புரம் மற்றும் ராமசாமி புரம் தெருவில் தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 44 | தார்சாலை | 1.808 | 4.75 | | 58.50 | |
| | | 34 | மணிநகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 43 | தார்சாலை | 1.25 | 5.50 | | 34.40 | |
| | | 35 | முனியசாமிபுரம் 2ஆம் தெரு மற்றும் மேற்குபகுதி சிமெண்ட் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 46 | சிமெண்ட் சாலை | 1.809 | 4.00 | | 80.00 | |
| | | 36 | தந்தி ஆபீஸ் ரோடு மற்றும் ஜெயிலாணி தெரு தொடர்ச்சி (காரணேசன் தியேட்டர் சாலை) தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி | 22 | தார்சாலை | 0.478 | 6.50 | | 33.50 | |
| | | 37 | பக்கிள் புரம் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 46 | சிமெண்ட் சாலை | 0.238 | 4.00 | | 9.90 | |
| | | 38 | டூவிபுரம் 5 வது தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 40 | தார்சாலை | 0.524 | 7.50 | | 18.50 | |
| | | 39 | லெவிஞ்சிபுரம் 2 வது தெரு மற்றும் சிவந்தாகுளம் தொடர்ச்சி பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 47 | சிமெண்ட் சாலை | 1.144 | 4.00 | | 47.60 | |
| | | 40 | குறிஞ்சிநகர் (கலைஞர் அரங்கம் பின்புறம்) பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 1 | தார்சாலை | 0.288 | 5.50 | | 13.00 | |
| | | 41 | மீனாட்சிபுரம் மெயின் ரோடு தார் சாலை அமைக்கும் பணி (பழைய பேருந்து நிலையம்) | 38 | தார்சாலை | 0.226 | 7.50 | | 8.60 | |
| | | 42 | பெருமாள்புரம் தெருவில் (சுப்பையா வித்யாலயம் பெண்கள் பள்ளி) தார் சாலை அமைக்கும் பணி | 37 | தார்சாலை | 1.104 | 4.75 | | 18.80 | |
| | | 43 | அண்ணா நகர் மேற்கு 8,9,10 தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 41 | தார்சாலை | 1.114 | 4.75 | | 33.85 | |
| | | 44 | அண்ணா நகர் 1 முதல் 11 வரை மற்றும் குறுக்கு தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 41,42,43 | தார்சாலை | 6.753 | 5.50 | | 133.00 | |
| | | 45 | மங்களபுரம் குறுக்கு தெரு மற்றும் அண்ணாநகர் 12 வது தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 41 | சிமெண்ட் சாலை | 1.117 | 4.50 | | 60.00 | |
| | | 46 | கே.வி.கே.நகர் மேற்கு பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 39 | சிமெண்ட் சாலை | 1.138 | 4.00 | | 47.35 | |
| | | | | | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 47 | ஸ்டேட் பாங்க் காலனி மெயின் ரோடு தார் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி (நகர் நல மையம்) | 1 | தார்சாலை | 0.47 | | 5.50 | 31.50 | |
| | 48 | வண்ணார் தெரு மற்றும் தாமோதர நகர் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 33 | சிமெண்ட் சாலை | 0.8 | | 4.50 | 43.00 | |
| | 49 | சுப்பையாபுரம் 1, 2 தெருவில் தார் சாலை அமைக்கும் பணி | 44 | தார்சாலை | 1.22 | | 5.50 | 42.80 | |
| | 50 | பிரையண்ட் அம்மன் கோவில் தெரு மற்றும் பிரையண்ட் நகர் 1, 2 தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி | 49, 50 | தார்சாலை | 1.998 | | 5.50 | 70.10 | |
| | | மொத்தம் | | | 45.154 | | | 2033.65 | |

| | | |
|---|---|---|
| | 3) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், வாகன ஓட்டுநர்கள், துலக்குனர்கள் மற்றும், அலுவலக உதவியாளர்களுக்கும் 2010ம் வருடத்திற்கான சீருடைகள் 50 சதவீதம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திலிருந்தும் 50 சதவீதம் கோ–ஆப்–டெக்ஸ் நிறுவனத்திலிருந்தும் வாங்குவதற்கும் மற்றும் தையற்கூலி வழங்க உத்தேச செலவுத் தொகை ரூ 7.50 லட்சத்தை பொது நிதியிலிருந்து பெறவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>எச்4/15188/2010 | 205) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 4) தூத்துக்குடி வட்டாட்சியரின் 26–7–2010ஆம் தேதிய ந.க.எண். அ2/11591/2010ம் எண் கடிதத்தில் வரிசை எண். 1ல் மீளவிட்டான் பகுதி 2 சிலோன் காலனி வார்டு சி. பிளாக் எண். 26, நகரளவு எண். 40 41, 42, வரிசை எண். 2ல் சுடலைகாலனி சர்வே வார்டு 2 பிளாக் 34ஏ, நகரளவு எண். 3785/2 வரிசை எண் 3ல் பாத்திமா நகர் சர்வே வார்டு 2 பிளாக் 3 நகரளவு எண்கள் 50/151, 275 மற்றும் வரிசை எண் 4ல் போல்டன்புரம் சர்வே வார்டு 2 பிளாக் 29 நகரளவு எண். 3395/1ல் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி 3 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகட்டி குடியிருந்து வரும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க ஆட்சேபனை உள்ளது/ இல்லை என தீர்மானம் நிறைவேற்றி தரக் கோரப்பட்டுள்ளது.<br><br>இம்மாநகராட்சி சர்வே வார்டு சி பிளாக் எண் 26, நகரளவு எண் 40ல் உள்ள சிலோன் காலனி நகரளவு ஆவணங்களின்படி ஸ்பின்னிங் மில் எனவும் தற்போது உபயோகம் சிலோன்அகதிகள் குடில் என நகரளவு ஆவணத்தில் உள்ளது. மேற்கண்ட இடம் ஸ்பின்னிங் மில் என தனியார் பெயரில் உள்ளது. எனவே மேற்படி இடத்திலுள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க ஸ்பின்னிங் மில் நிறுவனத்தினரிடம் தடையின்மைச்சான்று பெற்று பட்டா வழங்க ஆட்சேபனை இல்லை எனவும் ,<br><br>சுடலைகாலனி வார்டு 2, பிளாக் 34எ, நகரளவு எண் 3785/2 ஆனது நகரளவு ஆவணங்களின் படி ஜி.ஆர். நத்தம் என உள்ளதால் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க ஆட்சேபனை இல்லை எனவும், | 206) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | பாத்திமா நகர் வார்டு 2 பிளாக் 3 நகரளவு எண் 50/151 275 நகரளவு ஆவணங்களில் அரசு புறம்போக்கு ஜி.ஆர். நத்தம் என உள்ளதால் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க ஆட்சேபணை இல்லை எனவும்,<br><br>போல்டன்புரம் சர்வே வார்டு–2, பிளாக் 29 நகரளவு எண் 3395/1 ஆனது நகரளவு ஆவணங்களின்படி ஜி.ஆர். நத்தம் என உள்ளதால் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க ஆட்சேபனையில்லை எனவும் வட்டாட்சியருக்கு தெரிவிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>அரசாணை எண். 854 வருவாய்த் நி.மு. 1(2) துறை நாள் 30–12–06ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தெளிவுரைகளுக்கு உட்பட்டு, வட்டாட்சியர், தூத்துக்குடி அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மீளவிட்டான் பகுதி 2 சிலோன் காலனி வார்டு சி பிளாக் 26 நகரளவு எண். 40, சுடலைகாலனி வார்டு 2 பிளாக் 34எ நகரளவு எண் 3785/2, பாத்திமாநகர் வார்டு 2 பிளாக் 3 நகரளவு எண். 50/151, 275 மற்றும் போல்டன்புரம் வார்டு 2 பிளாக் 29 நகரளவு எண் 3395/1 ஆகிய ஜி.ஆர். நத்தம் புறம்போக்கு இடங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்குஆக்கிரமிப்பு வரன்முறை செய்து பட்டா வழங்க ஆட்சேபனையில்லை என வட்டாட்சியருக்கு தெரிவிக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>எப்1/9357/07 | |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் கணிணி மூலம் எல்லா கடித போக்குவரத்துகளும் நடைபெறுவதால் தற்சமயம் தட்டச்சு இயந்திரங்களுக்கு வேலையில்லாமல் கிடப்பில் இருக்கிறது. மின்தடை சமயத்தில் மட்டும் ஒரு சில கடிதங்கள் தட்டச்சு இயந்திரங்கள் மூலம் தட்டச்சு செய்யப்படும். மேலும் டுப்ளிகேட்டர் இயந்திரம் வாங்கி 12 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அதனையும் பயன்படுத்தாத நிலையில் ஜெராக்ஸ் இயந்திரத்தில் நகல்கள் எடுக்கப்பட்டு வருவதால் , அவசரத் தேவைக்கு மட்டும் பயன்படுத்த தமிழ் மற்றும் ஆங்கிலம் இயந்திரங்களில் ஒன்று ஆக இரண்டு தட்டச்சு இயந்திரங்களை மட்டும் வைத்துக்கொண்டு மீதம் உள்ள 4 எண்ணங்களை ஏலத்தில் விட மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/15428/10 | 207) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 6) இம்மாநகராட்சியில் உள்ள T, 6215– Lipi printer–ல் பழுது ஏற்பட்டதால் அனைத்து வரியினங்கள் சம்பந்தப்பட்ட கேட்பு அறிவிப்பு நகல் எடுக்க முடியாத நிலை உள்ளது. மேற்படி பிரிண்டருக்கான உடைந்த பாகங்கள் கிடைக்கப்பெறவில்லை. மேற்படி பிரிண்டரை சரி செய்வதற்கு ரூ. 30,000/–க்கான வரைவோலையை HCL INFO SYSTEMS LIMITED TRICHY என்ற நிறுவனத்திற்கு முன் தொகையாக வழங்கினால் தொகை கிடைக்கப்பெற்ற 15 நாட்களில் உடைந்த பாகத்தை சரி செய்து தருவதாக மேற்படி நிறுவனத்தாரால் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே இம்மாமன்றம் தனது தீர்மானம் எண். 183 நாள் 23–8–2010ல் மேற்படி பிரிண்டரில் உள்ள sported ஜோடி என்ற உடைந்த பாகத்தை மாற்றிப் பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ 10000/– தொகைக்கு அனுமதி வழங்கியுள்ளது.<br><br>எனவே மேற்படி நிறுவனத்தாருக்கு ரூ 30000/– தொகையை முன்பணமாக வழங்கி மேற்படி பிரிண்டரை சரி செய்வதற்கும், மேற்படி வகைக்கு கூடுதலாக ஆகும் செலவுத் தொகை ரூ. 20000/–ஐ இம்மாநகராட்சிக்குரிய பொது நிதியில் இருந்து செலவு செய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ5/12736/10 | 208) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>7) இம்மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட 17வது வார்டு மற்றும் 20வது வார்டில் சாலை அமைப்பதற்கும் போக்குவரத்திற்கும் இடையூராக உள்ள மூன்று மின் கம்பங்களை மின்வாரியம் மூலம் மாற்றி அமைத்துக்கொள்ளவும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2536/இ3/10</td>
<td>209) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>8) இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் வாகன கிளீனராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30–06–2010ல் ஓய்வு பெற்ற திரு. எஸ்.பி. தஸ்தகீர் என்பவருக்கு அன்னார் பணியாற்றிய காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதிச் சந்தா தொகை ரூ 2960/– வட்டி ரூ. 11166/– மான்யம் ரூ.10000 மொத்தம் ரூபாய் ரூ 24126/– ஐ (ரூபாய் இருபத்தி நான்காயிரத்து நூற்றி இருபத்தி ஆறு மட்டும்) பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>குறிப்பு – அனுமதிக்கலாம்.<br>இ2/12625/2010</td>
<td>210) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>9) அரசாணை (நிலை) எண் 92 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 27.07.2010ல் ஆதி திராவிடர் பழங்குடியினர் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தவர்களுக்கு வழங்கப்படும் ஈமச் சடங்கு மான்யத் தொகை ரூ 500/–லிருந்து ரூ 2500/.ஆக உயர்த்தி ஆணையிடப்பட்ட அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>பி4/15264/10</td>
<td>211) பதிவு செய்யப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>10) தூத்துக்குடி மாவட்டத்தில் 5–8–2010ல் நடைபெற்ற தூத்துக்குடி மாநகராட்சி புதிய அலுவலக கட்டிட திறப்பு விழா, அரசு நலத்திட்ட பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகிய விழாக்களில் கலந்து கொள்வதற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இம்மாநகராட்சி சார்பில் வரவேற்பு அளிப்பதற்கான அறிவிப்பினை தினத்தந்தி, தினமலர், மாலைமுரசு, தினமணி, தினகரன் ஆகிய நாளிதழ்களில் 5–8–2010ம் தேதியில் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு மேற்படி நாளிதழ் நிறுவனத்தார்களிடம் இருந்து கீழ்க்காணும் விவரப்படி விளம்பர கட்டணத் தொகையினை வழங்குமாறு கேட்டு விளம்பர கட்டண பில்கள் இம்மாநகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளன.<br>விவரம்
<table>
<tr><th>வ. எண்</th><th>நாளிதழ் நிறுவனத்தார் பெயர்</th><th>விளம்பர பில் எண்/ நாள்</th><th>விளம்பர கட்டண தொகை</th></tr>
<tr><td>1)</td><td>தினத்தந்தி</td><td>TVL 0205120/ 5-8-2010</td><td>ரூ 17325–00</td></tr>
<tr><td>2)</td><td>தினமலர்</td><td>5571/5–8–2010</td><td>ரூ.12000–00</td></tr>
<tr><td>3)</td><td>மாலை முரசு</td><td>44036/5–8–2010</td><td>ரூ.11400–00</td></tr>
<tr><td>4)</td><td>Express Publications (MADURAI) LTD. (தினமணி நாளிதழ்)</td><td>IAF/16659 /5-8-2010</td><td>ரூ. 40000–00</td></tr>
<tr><td>5)</td><td>KAL PUBLICATIONS (P) LTD (தினகரன் நாளிதழ்)</td><td>553658/ 5-8-2010</td><td>ரூ.20625–00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>ரூ.101350–00</td></tr>
</table>
எனவே மேற்படி மொத்த விளம்பர கட்டணத் தொகை ரூ 1,01,350/–ஐ இம்மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்வதற்கும் மேலே குறிப்பிட்ட விளம்பர கட்டணத் தொகைகளை மேற்படி நாளிதழ் நிறுவனத்தார்களுக்கு வழங்குவதற்கும், இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழங்கலாம். இ5/13268/10</td>
<td>212) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 11) மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தூத்துக்குடி அவர்களின் 30–6–2010ம் தேதிய கடிதத்தில் இம்மாநகராட்சிப் பகுதியில் 20 மைக்ரான் தடிமனுக்கு கீழ் உள்ள பிளாஸ்டிக் பைகள் விற்பனை செய்வதையும் உபயோகிப்பதையும் தடை செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரங்களைத் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாலிதீன் பைகளின் உபயோகம் நாளுக்கு நாள் பெருகிய வண்ணம் உள்ளதாலும் இதனால் சுற்றுப்புற சூழல் பல்வேறு வழிகளில் மாசுபடுவதோடு கழிவு நீர் வடிகால் மற்றும் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு கொசுக்களின் உற்பத்திக்கு ஏதுவாவதோடு பல்வேறு வகையான சுகாதாரக் கேடுகளை விளைவித்துக்கொண்டிருக்கின்றன.<br><br>எனவே முதற்கட்டமாக 20 மைக்ரான் தடிமனுக்கு குறைவான பாலிதீன் பைகள் இம்மாநகராட்சி எல்லைக்குள் விற்பனை செய்ய மற்றும் உபயோகிக்க தடைவிதிக்கவும் மீறுவோர் மீது திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2000ன் படி 1) மொத்த விற்பனையாளர்களுக்கு ரூ 1000/– 2) சில்லறை மற்றும் உபயோகிப்பவர்களுக்கு ரூ 100/– வீதம் அபராதம் விதித்திடவும் பறிமுதல் செய்து அழிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு –</u>** அனுமதிக்கலாம்<br>எச்1. 14677 / 2010 | 213) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 12) தூத்துக்குடி மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு மேற்கு, மற்றும் திருச்செந்தூர் ரோடு சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள தந்தை ஈ.வே. ரா. பெரியார் சிலையை அப்புறப்படுத்தக்கோரி திரு S.P. சிலுவை என்பவரால் மதுரை உயர்நீதி மன்றத்தில் மாநகராட்சி ஆணையர் அவர்களை 2வது பிரதிவாதியாகவும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஆர். கனகராஜ் ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கு எண். W.P.(M.D.) No. 8863/09ல் தொடரப்பட்ட வழக்கு 18–11–2009ம் தேதிய மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்புரையின்படி தள்ளுபடி செய்யப்பட்டது. அதை தொடர்ந்து மேற்கண்ட இடத்தில் தந்தை ஈ.வே.ரா. பெரியார் சிலை வைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அரசாணை எண்.1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 2–1–2009ஐ ரத்து செய்யக்கோரியும் பெரியார் சிலை திறப்பு விழாவிற்கு இடைக்கால தடை உத்திரவுவேண்டி திரு எஸ்.பி. சிலுவை என்பவரால் மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(M.D.) No.6714/10 வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை முதல் பிரதிவாதியாகவும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களை 2வது பிரதிவாதியாகவும் இம்மாநகராட்சி ஆணையர் அவர்களை 3வது பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட வழக்குகளில் மாமன்ற வழக்கறிஞர் திரு எஸ். கடற்கரை அவர்களை மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தவும், அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1. 20745/07 | 214) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 13) தூத்துக்குடி மாநகராட்சி ஆண்டாள் தெரு, கருத்தப்பாலம் அருகில் பக்கிள் ஓடையில் ஆக்கிரமிப்பு செய்த திரு. பி. செந்தில்வேல் என்பவர் தூத்துக்குடி மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் கட்டிடங்களை அகற்றக்கூடாது என தொடரப்பட்ட வழக்கு ஒ. எஸ். எண். 311/2010ல் இம்மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் மாமன்ற வழக்கறிஞர் திரு எஸ். செல்வராஜ் அவர்களை மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தவும், அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1/23428/2004 | 215) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 14) தூத்துக்குடி மாநகராட்சி ஆண்டாள் தெருவில் கருத்தப்பாலம் அருகில் பக்கிள் ஓடையில் ஆக்கிரமிப்பு செய்த திரு எல். ராஜசீலன் என்பவர் தூத்துக்குடி மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் கட்டிடங்களை அகற்றக்கூடாது என தொடரப்பட்ட வழக்கு I.A.NO.1254/10 IN O.S. 260/10 இம்மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் மாமன்ற வழக்கறிஞர் திரு எஸ். செல்வராஜ் அவர்களை மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1. 23428/2004 | 216) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 15) தூத்துக்குடி மாநகராட்சி கிரேட் காட்டன் ரோடு கடற்கரை சாலை சந்திப்பில் சர்வே வார்டு 7, பிளாக் 4பி. நகரளவு எண் 18ல் உள்ள ஆஷ் மெமோரியல் பூங்காவை அழகுபடுத்தி பராமரித்து வருவதற்கு அனுமதி கேட்டு வ.உ.சிதம்பரம் கல்வி கழக செயலர் திரு. ஏ.பி.சி.வி. சொக்கலிங்கம் மனு கொடுத்துள்ளார்.<br><br>மேற்கண்ட ஆஷ் மெமோரியல் பூங்காவை இரண்டு ஆண்டு காலம் பராமரிப்பு செய்வதற்கு அனுமதி வழங்கவும், இரண்டு ஆண்டு காலம் முடிந்தவுடன் மாநகராட்சியில் மீண்டும் புதுப்பித்துக்கொள்ள அனுமதி பெற வேண்டும் எனவும், மாநகராட்சிக்கு தேவைப்படும்பட்சத்தில் திரும்ப ஒப்படைக்க வேண்டும் எனவும், பூங்காவில் பராமரிப்பு பணி மேற்கொள்ளும்போது மாநகராட்சி நிர்வாக பொறியாளரின் ஆலோசனையின் படி பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மேற்படி பூங்காவை பராமரிப்பதற்கு வ.உ.சிதம்பரம் கல்வி கழகத்திற்கு அனுமதி வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதி வழங்கலாம். எப்1. 15874/2010 | 217) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 16) இம்மாநகராட்சியில் 2010–2011 ஆண்டிற்குரிய சொத்துவரி, ஆக்கிரமிப்பு சுகாதாரமின்மை சம்பந்தமாக மாநகராட்சி சார்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்கிற்கு மாநகராட்சி வழக்கறிஞர் திரு. கடற்கரை அவர்களுக்கு வழக்கு கட்டணம் உத்தேச செலவு ரூ 1,50,000/– (ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.<br>சி3.15988/10 | 218) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

17) இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள 51 வார்டுகளில் 20 வார்டுகள் 5 வார்டுகள் வீதம் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண். 186 நாள் 21–3–2007ன் படி மூன்று வருடங்களுக்கு தனியார் மூலம் குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்ததாரர்கள் நியமனம் செய்யவும் ஒவ்வொரு வருடமும் அவர்களின் பணிதிறன் அடிப்படையில் மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தத்தை புதுப்பித்துக்கொள்ளவும் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மன்றத் தீர்மானம் எண். 156 நாள் 30.07.10ல் ஒப்பந்தத்தை 15–07–2010 முதல் 31–08–2010 வரை நீட்டித்து அனுமதி வழங்கியுள்ளது. தற்போது ஒப்பந்த காலம் முடிவடைவதாலும் இ. டெண்டர் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு முடிவு செய்யப்படாமல் இருப்பதாலும் போதிய கால அளவு இல்லையென்பதாலும் அவசர அவசியம் கருதி ஒப்பந்தத்தை10.10.2010 வரை நீட்டித்துக்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–** அனுமதிக்கலாம்.

எச்1/254/07

219) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களில் குப்பை அள்ளுவதற்கு மன்றம் தனது தீர்மான எண். 144 நாள் 18–6–2010ல் ரூ 235 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 4 மண்டலங்களுக்கு தனித்தனியாக குப்பைகள் மற்றும் சாக்கடை மண் அள்ளும் பணிக்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

| மண்டலம் எண் | வார்டு எண் | மதிப்பீடுத் தொகை | |
|---|---|---|---|
| மண்டலம் 1 | 10, 11, 12, 13, 14 | ரூ. 42.48லட்சம் (வருடத்திற்கு) | |
| மண்டலம் 2 | 46, 47, 48, 49, 50 | ரூ.58.68 லட்சம் (வருடத்திற்கு) | |
| மண்டலம் 3 | 19, 20, 29, 30, 31 | ரூ.73.08 லட்சம் (வருடத்திற்கு) | |
| மண்டலம் 4 | 41, 42, 44, 45, 51 | ரூ.73.44 லட்சம் (வருடத்திற்கு) | |

மேற்கண்ட பணிக்கு 01–09–10ம் தேதி e Tender மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்கண்ட பணிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு பொது சுகாதாரத்தை முன்னிட்டு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி 15–09–2010ல் கோரப்பட்டது.

இப்பணிக்கு 4 மண்டலங்களுக்கு தனித்தனியாக கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

மண்டலம் . 1

1. எஸ்.கே. செல்வி

   73/9இ/3 போல்பேட்டை, தூத்துக்குடி.

2. ஏ. விக்டோரியா

   122. எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி.

மண்டலம் – 2

1. எஸ். கே. செல்வி

   73/9இ/3 போல்பேட்டை, தூத்துக்குடி.

2. ஏ. விக்டோரியா

   122. எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி.

220) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது

மண்டலம் – 3

1. எஸ்.கே. செல்வி

   73/9இ/3 போல்பேட்டை, தூத்துக்குடி.

2. எ. விக்டோரியா

   122. எட்டையாபுரம் ரோடு,தூ த்துக்குடி.

மண்டலம் – 4

1. திருமதி. எஸ். கே. செல்வி

   73/95/3 போல்பேட்டை, தூத்துக்குடி.

2. திருமதி. எ. விக்டோரியா

   122. எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி.

மேற்கண்டவாறு நான்கு மண்டலத்திற்கும் தனியார் வசம் குப்பைகள் அள்ளுவதற்கும் சாக்கடை மண் எடுப்பதற்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தகுதி உடையது என 28–9–2010ம் தேதிய டெக்னிக்கல் ஸ்டேன்டிங் கமிட்டி தெரிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி விலைப் படிவம் 4–10–10ல் திறக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் விலை விகிதம் பெறப்பட்டது.

| ஒப்பந்ததாரர் பெயர் | குப்பைகள் அள்ளுவதற்கு டன் 1க்கு including primary Secondary and Dumping | சாக்கடை மண் அள்ளுவதற்கு 6 Cubic meter per Trips |
|---|---|---|
| மண்டலம் – 1<br>1) திருமதி எஸ்.கே. செல்வி, தூத்துக்குடி.<br>2) திருமதி. எ. விக்டோரியா, தூத்துக்குடி. | ரூ. 1154/–<br>ரூ.1217/– | ரூ. 641/–<br>ரூ.647/– |
| மண்டலம் – 2<br>1. திருமதி. எஸ்.கே. செல்வி தூத்துக்குடி<br>2. திருமதி. எ. விக்டோரியா, தூத்துக்குடி. | ரூ. 1294/–<br>ரூ.1217/– | ரூ. 741/–<br>ரூ.647/– |
| மண்டலம் – 3<br>1. திருமதி. எஸ்.கே. செல்வி தூத்துக்குடி<br>2. திருமதி. எ. விக்டோரியா, தூத்துக்குடி. | ரூ. 1294/–<br>ரூ.1267/– | ரூ. 741/–<br>ரூ.687/– |
| மண்டலம் – 4<br>1. திருமதி. எஸ்.கே. செல்வி தூத்துக்குடி<br>2. திருமதி. எ. விக்டோரியா, தூத்துக்குடி. | ரூ. 1194/–<br>ரூ.1217/– | ரூ. 641/–<br>ரூ.647/– |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டு விலையை விட கூடுதலாக இருந்த காரணத்தால் மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு ஒப்புதல் கடிதம் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர் கீழ்க்கண்டவாறு விலை குறைப்பு கடிதம் கொடுத்துள்ளார்.

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –**

1) மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்கண்ட விபரப்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள விலை விகிதத்தின்படி ஒப்பந்ததாரர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு (வேலை உத்திரவு வழங்கிய நாள் முதல் ) அனுமதிக்கலாம்.

| ஒப்பந்ததாரர் பெயர் | குப்பைகள் அள்ளுவதற்கு டன் 1க்கு including primary , Secondary and Dumping | சாக்கடை மண் அள்ளுவதற்கு 6 Cubic meter per Trips |
|---|---|---|
| மண்டலம் – 1<br>திருமதி எஸ்.கே. செல்வி, தூத்துக்குடி | ரூ. 1047/– (per Ton) | ரூ. 517/– (per Trip) (6 Cubic meter) |
| மண்டலம் – 2<br>திருமதி. எ. விக்டோரியா, தூத்துக்குடி. | ரூ. 1050/– (per Ton) | ரூ. 520/– (per Trip) (6 Cubic meter) |
| மண்டலம் – 3<br>திருமதி. எ. விக்டோரியா, தூத்துக்குடி. | ரூ. 1050/– (per Ton) | ரூ. 520/– (per Trip) (6 Cubic meter) |
| மண்டலம் – 4<br>திருமதி எஸ்.கே. செல்வி, தூத்துக்குடி. | ரூ. 1047/– (per Ton) | ரூ. 517/– (per Trip) (6 Cubic meter) |

2. மேற்கண்ட பணிகளுக்கு தனித்தனியாக தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீட்டு தொகையையும் அங்கீகரிக்கலாம்.

எச்1. 10003/2010

# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

## (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

### அவசரக் கூட்டப்பொருள்

2010ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ஆம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை–I பிரிவு எண் 3 (2)–ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 20.10.2010 | 1 | தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேலூர் ரயில்வே நிலையத்தை புதிய பேருந்து நிலையம் எதிரில் உழவர் சந்தைக்கு தெற்கில் புதியதாக ரயில்வே நிலையம் அமைப்பது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் ந.க.எண்.இ3/44689/2008 நாள் 14.12.2008ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பேரில் நகரளவு எண்கள் 4127, 4128, 4153, 4160 ஆகியவற்றில் நெடுஞ்சாலைத்துறை இடம் நகரளவு எண் 4160 நீங்கலாக மாநகராட்சி சாலை இடத்தில் 3241.5 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தினை ரயில்வே நிர்வாகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய வேண்டி முதுநிலை கோட்டப் பொறியாளர் (தெற்கு) தெற்கு ரயில்வே, மதுரை கடிதம் எண் u/w 271/Land Acquisition T.N. நாள் 10.11.09ன்படி கோரப்பட்டுள்ளதில் பொதுநலன் கருதி அரசின் சிறப்பு அனுமதி பெற்று மாநகராட்சி சாலை இடத்தினை இரயில்வே நிர்வாகத்திற்கு வழங்க மாமன்ற தீர்மானம் எண் 19 நாள் 04.01.10ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அரசாணை எண் 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 25.02.2000ன்படி மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை மாநில மற்றும் மைய அரசுத் துறைகளுக்கு வழங்க வேண்டியது இருப்பின் நிலத்தின் அப்போதைய சந்தை மதிப்பு (Market Value at the time) அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மாநகராட்சி சாலை இடமான நகரளவு வார்டு 4, பிளாக் எண் 32A, நகரளவு எண்கள் 4127ல் 1143ச.மீ, 4128/1ல் 273ச.மீ, 4128/2ல் 731.50ச.மீ ஆக மொத்தம் 3241.5ச.மீ பரப்பளவு இடத்தில் சார் பதிவாளர் வழிகாட்டுதல் மதிப்பின்படி கிரையத் தொகை ரூ.14829863/– அல்லது கிரையத் தொகைக்கு ஈடாக ரயில்வே நிர்வாகத்தின் இடத்தினை வழங்க சம்மதம் | 221) இம்மாநகராட்சியில் மேலூர் ரயில்வே நிலையத்தை மாற்றி அமைக்க மாநகராட்சி சாலையோரத்தில் 3241.5ச.மீ பரப்பளவு இடத்தினை வழங்க ரயில்வே நிர்வாகம் கோரியதில் சார்பதிவாளர் வழிகாட்டு மதிப்பின்படி மாநகராட்சிக்கு மாற்று இடமாக 39234ச.மீ பரப்பளவு இடம் ரயில்வே நிர்வாகம் வழங்க வேண்டியதற்குப் பதிலாக ஆண்டாள் தெருவில் 634.02ச.மீ இடம் குறைவாக உள்ளதாலும் வேறு மாற்று இடம் இல்லாததாலும் 3289.48ச.மீ இடம் மட்டும் மாநகராட்சிக்கு ரயில்வே நிர்வாகம் வழங்க இயலும் என ரயில்வே நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றம் மேற்கண்ட கருத்தை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட முடிவினை எடுத்துள்ளது.<br>தற்போது உள்ள மேலூர் ரயில் நிலையம் மிகவும் இடையூராக உள்ளது. மேலும் தற்போது வண்டிகள் நிற்கும் போது பிளாட்பாரம் தாண்டி ரயில் பெட்டிகள் நிற்கின்றன. இதனால் பொதுமக்கள் இறங்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. பொதுமக்கள் மேற்கண்ட ரயில் நிலையத்திற்கு வெளியே செல்வதற்கு சுமார் 0.5கி.மீ முதல் 1.00 கி.மீ. வரை நடந்து சென்று பிறகு ரயில் நிலையத்தை விட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | தெரிவிக்குமாறு ரயில்வே நிர்வாகத்திடம் இவ்வலுவலக 01.04.2010ம் தேதியிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டதில், முதுநிலை கோட்டப் பொறியாளர் (தெற்கு) தென்னக ரயில்வே, மதுரை அவர்களின் கடித எண் u/w 271/Land Acquisition T.N. நாள் 11.05.10ன்படி மாநகராட்சி இடத்தின் கிரையத் தொகைக்கு ஈடாக ஆண்டாள் தெரு, மேலூர் ரயில்வே பிளாட்பாரம் அமைந்துள்ள ரயில்வே இடத்தினை மாநகராட்சிக்கு வழங்க சம்மதம் தெரிவித்துள்ளது. சார் பதிவாளர் வழிகாட்டுதல் மதிப்பீட்டின்படி ஆண்டாள் தெரு பகுதியிலுள்ள நிலத்திற்கு 1சதுர மீட்டருக்கு ரூ.3780/– ஆக உள்ளது. மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட 3241.5 சதுர மீட்டர் இடத்தின் கிரையத் தொகைக்கு இணையாக ஆண்டாள் தெருவில் 3923.5 ச.மீட்டர் பரப்பளவுள்ள இடத்தினை ரயில்வே நிர்வாகம் மாநகராட்சிக்கு வழங்க வேண்டியுள்ளது. எனவே ரயில்வே நிர்வாகம் கோரியுள்ள 3241.5 ச.மீ பரப்பளவுள்ள மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடத்தினை இரயில்வே நிர்வாகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாகவும், ரயில்வே நிர்வாகம் மாநகராட்சிக்கு வழங்கப்பட வுள்ள மேலூர் ரயில்வே நிலையம் பிளாட்பாரம் இடமான 3923.5ச.மீ. பரப்பளவுள்ள இடத்தினை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் அரசின் பரிசீலனைக்கும் தக்க உத்திரவுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக கருத்துரு அனுப்ப மாமன்ற தீர்மானம் எண் 133 நாள் 26.05.2010ன்படி மாமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.<br><br>மாநகராட்சிக்கு ரயில்வே நிர்வாகம் மாற்று இடம் வழங்குவது தொடர்பாக, கோட்ட ரயில்வே மேலாளர்/ பணிகள் தென்னக ரயில்வே/ மதுரை அவர்களின் கடிதம் எண் u/w 271/Land Acquisition/T.N. நாள் 11.10.10ன்படி மாநகராட்சியிடம் ரயில்வே நிர்வாகம் இடம் வழங்க கோரியுள்ள 3241.5ச.மீ பரப்பளவு இடத்தின் சார் பதிவாளர் வழிகாட்டுதல் மதிப்பு ரூ.148299863/–க்கு ஈடாக ஆண்டாள் தெரு நகரளவு எண் 4259ல் 1822.28ச.மீ, 3452ல் 282.62ச.மீ, 3442ல் 244.83ச.மீ, 2371ல் 508.56ச.மீ மற்றும் 2152ல் 431.20 ச.மீ. ஆக மொத்தம் 3289.48ச.மீ பரப்பளவு இடத்தினை மாநகராட்சிக்கு வழங்க சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரயில்வே நிர்வாகத்திடம் மாநகராட்சிக்கு சார் பதிவாளர் வழிகாட்டுதல் மதிப்பின் அடிப்படையில் 3923.5ச.மீ பரப்பளவுள்ள இடத்தினை வழங்க கோரப்பட்டதிற்கு, ரயில்வே நிர்வாகத்திடம் மாநகராட்சி எல்லைக்குள் வேறு மாற்று இடம் இல்லை எனவும் புதியதாக ரயில்வே நிலையம் அமைப்பது தூத்துக்குடி மாநகர் வாழ் மக்களின் நலனுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுநலன் கருதியும் மாநகராட்சி கோரியுள்ள 3923.5ச.மீ பரப்பளவு இடத்திற்கு பதிலாக 3289.48ச.மீ பரப்பளவு இடத்தினை மட்டும் பெற்றுக் கொண்டு, இரயில்வே நிர்வாகத்திற்கு மாநகராட்சி சாலை இடத்தில் புதிய ரயில்வே நிலையம் அமைக்க 3241.5ச.மீ. பரப்பளவுள்ள மாநகராட்சி இடத்தினை வழங்க கோட்ட ரயில்வே மேலாளரின் 11.10.10ம் தேதிய கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார். எனவே இப்பொருள் குறித்து முடிவு செய்ய முதுநிலை ரயில்வே கோட்ட பொறியாளர் மதுரை அவர்களின் 11.10.10ம் தேதிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**: மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>எப்1/809/2009 | பிறகு ரயில் நிலையத்தை விட்டு வெளியே வருகின்ற சூழ்நிலையில் உள்ளது. மேலும் தற்போது தூத்துக்குடி மாநகராட்சியாக இயங்கி வருகிறது. அதனால் தற்போது ரயில்வே நிலையம் அமைக்கப்படவுள்ள இடம், புதிய பேருந்து நிலையம் அருகில் வருகின்ற காரணத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறின்றி மிகவும் வசதியாக இருக்கும். எனவே மேற்கண்ட ரயில்வே நிலையத்தை அவசியம் இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளது.<br><br>தற்போது உள்ள மேலூர் ரயில்வே நிலையம் அருகில் ஆண்டாள் தெருவின் அகலம் மிகவும் குறைவாக உள்ளது. இதனால் போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது. ஒவ்வொரு தடவையும் ரயில்கள் வரும் போதும் போகும் போதும் அவ்விடத்தில் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே தற்போது உள்ள சூழ்நிலையில் ரயில்வே நிர்வாகம் கொடுக்கப்படவிருக்கும் இடம் தற்போது உள்ள சாலையை அகலப்படுத்தி போக்குவரத்திற்கு எவ்வித இடையூறின்றி பொதுமக்கள் புதிய பேருந்து நிலையத்திற்கு எளிதாக சென்று வர இயலும். மேலும் ரயில்வே நிலையத்தை மாற்றி மாநகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தின் தெற்கு பகுதியில் புதியதாக ரயில்வே நிலையம் அமைப்பதால் மாநகரிலுள்ள போக்குவரத்து நெரிசல் மிகவும் குறையும். எனவே திருச்செந்தூர் செல்லும் பயணிகளின் வசதிக்காகவும், நன்மைக்காகவும் தூத்துக்குடி மாநகர் வாழ் மக்களின் பொதுநலன் கருதியும், ரயில்வே நிர்வாகத்திடம் 634.02ச.மீ இடம் குறைவாக 3289.48ச.மீ. இடத்தினை மட்டும் பெற்றுக் கொண்டு புதிய ரயில்வே நிலையம் அமைக்க மாநகராட்சி சாலை இடத்தில் 3241.5ச.மீ. பரப்பளவு இடத்தினை ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்க மாமன்றம் ஒப்புதல் அளிக்கிறது. மேலும் அரசின் சிறப்பு அனுமதி பெற தீர்மானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 2 | தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு பீச்ரோடு, ரோச்காலனி, 1வது தெரு வார்டு 1, பிளாக் 9, நகரளவு எண் 1128/8ல் மாநகராட்சி அனுமதியின்றி கட்டிடம் கட்டப்பட்டு வரப்படுகிறது. அனுமதியின்றி கட்டும் கட்டிடத்திற்கு தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 296 (1) (2) (3)ன்படி 29.07.2010 மற்றும் 11.10.2010ல் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது. அறிவிப்பின்படி கட்டுமானத்தை நிறுத்தாமல் மனையின் இடது புறமுள்ள கழிவுநீர் ஓடையினை ஆக்கிரமித்தும் கட்டிட பணி நடைபெற்று வருகிறது. எனவே மேற்படி கட்டிட பணி மேலும் தொடராமல் இருக்க நீதிமன்றம் மூலம் தடையுத்தரவு பெறவும், மாமன்ற வழக்கறிஞர் வழக்கு தொடரவும், வழக்கிற்கான செலவுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்5/13263/10 | 222) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3 | இம்மாநகராட்சி வார்டு எண் 30, கதவு எண்கள் 38பி மற்றும் 49/1, சிவன் கோவில் தெரு, கமாக் பள்ளி நிறுவனத்தினர் நடத்தி வரும் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD) 6012/08 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் 08.07.08ல் வழங்கப்பட்ட உத்திரவின்படி, மேற்படி பொருள் தொடர்பாக சட்ட விதிகளுக்கு உட்பட்டு வழிவகை இருப்பின் 8 வார காலத்திற்குள் தெரிவிக்க உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவு தொடர்பாக மனுதாரருக்கு வழங்கப்பட்ட அறிவிப்பினை எதிர்த்து மீண்டும் உயர்நீதிமன்றத்தில் WP(MD) 3654/09 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளர்கள். மேற்படி இரு வழக்குகளையும் மாமன்ற உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவினங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ7/16764/06 | 223) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | 4 | இம்மாநகராட்சி வார்டு எண் 51, பாளைரோடு மேற்கு ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சொத்துவரி விதிப்பு எண்கள் 510412 முதல் 510416 மற்றும் 510464, 510465 மற்றும் 511366க்கு 2008–09ம் ஆண்டிற்கான சொத்துவரி பொது சீராய்வின்படி அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்பினை எதிர்த்து மேற்படி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரி திரு ஜி.வெற்றிவேல் என்பவர் இம்மாநகராட்சிக்கு எதிராக MP(MD) No.2/09 WP(MD) 4190/09 என்ற வழக்கு எண்ணில் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் 20.05.09ம் தேதிய உயர்நீதிமன்ற உத்திரவில் வழக்கில் குறிப்பிட்டுள்ள வரிவிதிப்புகளுக்கு 2008–09ம் அரையாண்டுகளுக்கு கேட்பு அறிவிப்பில் கண்ட தொகையில் 50% வரித்தொகையினை மனுதாரர் செலுத்த இடைக்கால உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தடை உத்திரவினை நீக்கம் செய்யவும், இவ்வழக்கில் மாநகராட்சி தரப்பில் உயர்நீதிமன்றத்தில் எதிர் வழக்காட உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு எஸ்.கடற்கரை அவர்களிடம் இவ்வழக்கினை ஒப்படைத்ததற்கும், வழக்கிற்கான செலவுத் தொகைக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ8/9537/09 | 224) அலுவலகக்குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 5 | இம்மாநகராட்சி தெற்கு பீச்ரோடு அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.பி.வ/ம(திக) எண் 18/86ல் மனை எண் 12ன் உரிமையாளர்கள் திரு டி.ஞானராஜ் மற்றும் திரு டி.தேவராஜ் என்பவர்கள் தங்கள் மனையின் முன்பக்க தெருவில் கட்டிடம் கட்ட கூடாது என தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS No.386/10 IANo.1874/10 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கினை எதிர்த்து வழக்கினை நடத்திட மாமன்ற வழக்கறிஞரை கோரலாம் . மேற்படி வழக்கிற்கான செலவுகளுக்கும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: அனுமதிக்கலாம்.<br><br>எப்5/15926/10 | 225) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |